# DEPOSITION OF WITNESS

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **180/2025** |
| **பெயர்: PW-1** | **அன்பரசி** |
| **கணவர் பெயர் :** | **சுரேஷ்குமார்** |
| **வயது:** | **31/2026** |
| **ஊர்:** | **நன்னிமங்கலம்** |
| **தாலுக்கா** | **கூத்தாநல்லூர்** |
| **வேலை** | **வீட்டுக்குடித்தனம்** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of August 2026.

**<u>ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.52 AM</u>**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி.உஷா (உதவியாளர்) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. நான் B.Sc படித்துள்ளேன். எனது தாய், தந்தை பெயர் என்னவென்றால், தந்தை பெயர் கனகசபாபதி, தாய் பெயர் மணிமேகலை ஆகும். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால், 2018 ஆகும். திருமணம் ஆன பின் எங்கு வசித்தேன் என்றால், மன்னார்குடி ஆகும், 2019 ல் குழந்தை பிறந்தவுடன் நன்னிமங்கலத்திற்கு வந்துவிட்டேன். 2019 ல் இருந்து எனது அம்மா வீட்டில்தான் வசிக்கிறேன் என்றால், சரிதான். திருமணத்திற்கு முன் எனது தந்தை பெயரை தலைப்பெழுத்தாக(Initial) போட்டுதான் நான் கையொப்பம் இடுவேன் என்றால், சரிதான், திருமணத்திற்கு பின் எனது கணவர் பெயரை தலைப்பெழுத்தாக(Initial) போட்டுதான் நான் கையொப்பம் இடுவேன்.

நான் எனது திருமணத்திற்கு பிறகு கையொப்பத்தில் Initial–ஐ மாற்றியதை பற்றி நான் Gazatte –ல் notify செய்தேனா என்றால், இல்லை.

2. நான் தாக்கல் செய்த EX–D1 ல் 2021–லிருந்து க.எண்.43,சாத்தனூர் எனும் முகவரியில் வசிப்பதாக VAO விடம் சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால், சரிதான். எனது EX–D2 to EX–D6 வரை உள்ள சான்றாவணங்களில் எனது முகவரியாக க.எண்.43,சாத்தனூர் என்று கொடுக்கவில்லை என்று சொன்னால், க.எண்.4/196A, மெயின்ரோடு, நன்னிமங்கலம் ஆகும். EX–D1 ல் கொடுக்கப்பட்ட முகவரி தவறு என்று சொன்னால், எனக்கு தெரியாது. நான் என்னை ஒரு சாட்சியாக விசாரிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட S.353 BNSS மனுவிலும் முகவரியாக க.எண்.43,சாத்தனூர் என்று கொடுக்கவில்லை என்று சொன்னால், எனக்கு விவரம் சரியாக தெரியவில்லை.

3. நான் எனது முதல்விசாரணையில் எனது கணவர் 2021– ல் அருண் என்பவரிடம் 2 பூர்த்திசெய்யப்படாத கையொப்பம் இடப்படாத என்னுடைய காசோலைகளை கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். நான் எனது முதல்விசாரணையில் 2 பூர்த்திசெய்யப்படாத கையொப்பம் இடப்படாத என்னுடைய காசோலைகளின் எண்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான்.

4. என்னுடைய முதல்விசாரணையில் 2023 ஆம் ஆண்டு அருண் என்பவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரத்தின் நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான், 2024 ல் தான் பத்திரம் என் கணவரால் எழுதிக்கொடுக்கப்பட்டது. அந்த பத்திரத்தில் இவ்வழக்கு காசோலை எண்ணானது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

5. 15.12.2025 அன்று அருண் என்பவர் எங்களிடம் கொடுத்திருந்த ரூ.2 இலட்சத்து ஐம்பதாயிரத்தில் என் கணவர் ரூ.1 இலட்சம் கொடுத்துவிட்டார் என்பதால் ஏற்கனவே என் கட்சிப்படி கொடுக்கப்பட்ட 2 காசோலைகளில், ஏன் 1 காசோலையை கூட திரும்பி பெறவில்லை என்றால், அருண் என்பவர் எங்களிடம் அச்சமயத்தில் சிங்கப்பூரில் இருந்ததால் அவர் இந்தியா வந்தவுடன் தருவதாக கூறியதால் வாங்கவில்லை. நாங்கள் திருப்பி கொடுத்த ரூ.1 இலட்சத்தை

பத்திரத்தில் வரவு வைக்கவில்லை என்றால், சரிதான்.

6. என் கணவர் 2025 ஆம் வருடம் டிசம்பர் மாதம் கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் எனது கணவர் அருன் என்பவர் மீது கொடுக்கப்பட்ட புகாரில் இவ்வழக்கின் காசோலை எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

7. என் கட்சிப்படி 2026 பிப்ரவரியில் அருண் என்பவரின் மனைவியான கீதா–விடம் கொடுத்த ரூ.2 இலட்சத்திற்கு நான் ஏதேனும் ஆவணம் அவரிடம் எழுதிப்பெற்றேனா என்றால், இல்லை.

8. என் கட்சிப்படி மொத்தம் ரூ.3 இலட்சம் கொடுத்தபின்னும் நான் ஏன் பத்திரத்தை பெறவில்லை என்றால், என் கணவரிடம் கீதா பேசிக்கொள்வதாக கூறினார்.

9. பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதால் அருண் மற்றும் அவரது மனைவி நாங்கள் கொடுத்த பத்திரம் மற்றும் 2 காசோலைகளை திருப்பி கொடுக்கவில்லை என்று காவல்நிலையத்தில் மீண்டும் புகார் ஏதேனும் கொடுத்தோமா என்றால், கொடுக்கவில்லை. பத்திரம் மற்றும் 2 காசோலைகளை திருப்பி கொடுக்கவில்லை என்பதால் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினோமா என்றால், இல்லை.

10. நான் எனது கட்சிப்படி 2 கையொப்பம் இடாத, நிரப்பப்படாத காசோலைகளை அருண் என்பவரிடம் கொடுத்தேன் என்பதற்கு இணங்க அந்த 2 காசோலைகளின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

11. நீதிமன்ற அழைப்பாணையை நான் தான் பெற்றேன் என்றால், சரிதான். 13.08.2025 ல் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் வாங்கினேனா என்றால், இல்லை. அதை யார் பெற்றார் என்றால், எனக்கு தெரியாது.

12. நீதிமன்ற அழைப்பாணை வந்த பின் என் மீது தவறாக புகார் கொடுத்துள்ளார் என்று நான் காவல்நிலையத்தில் புகாரோ அல்லது நீதிமன்றத்தில் கடிதமோ அனுப்பினேனா என்றால், இல்லை. நீதிமன்ற அழைப்பான வந்த பின் புகார்தாரர் வீட்டிற்கு சென்று புகார்தாரரை சந்தித்து ஏன் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளீர் என்று கேட்டேனா

என்றால், எனக்கு புகார்தாரரை யார் என்று தெரியாது.

13. நான் நீதிமன்றத்தில் கையொப்பம் இட்ட S.274 BNSS, s.351 BNSS மற்றும் என்னுடைய வக்காலத்து ஆகியவற்றில் போடப்பட்ட கையொப்பமும், Ex–P1 ல் உள்ள கையொப்பமும் ஒரே கையொப்பம் என்றும், அதில் initial மட்டும்தான் மாறப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான்.

14. அருண் என்பவர் கொடுக்க வேண்டிய பணத்திற்கும், இவ்வழக்கின் புகார்தாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல. அருண் என்பவருக்கு பணத்தை திருப்பி செலுத்தியதற்கினங்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். அதனால், புகார்தாரரிடம் நான் வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்க எனக்கு கடமை இருக்கிறது என்று சொன்னால், புகார்தாரரை எனக்கு தெரியாது, அவரிடம் நான் பணம் பெறவில்லை.

**முடிக்கப்பட்ட நேரம் 12:35 PM**
**(புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.